சீரியல் எண்: 0 1 6 1 0 6 1 1 1 3

2026

வினாத்தொகுப்பு

பகுதி-அ (தமிழ் மொழி தகுதித் தேர்வு)(பத்தாம் வகுப்புத் தரம்)
பகுதி-ஆ (பொது அறிவு) (பத்தாம் வகுப்புத் தரம்) மற்றும்
பகுதி-இ (திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு)(பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் **மொத்த மதிப்பெண்கள் : 300**

வினாக்களுக்கு விடையளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது.
2. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
3. இவ்வினாத்தொகுப்பு எண்ணை OMR விடைத்தாளில் குறிப்பதற்கு முன்பும் மற்றும் விடையளிக்கத் தொடங்கும் முன்பும், இவ்வினாத்தொகுப்பில் அனைத்து வினாக்களும் வரிசையாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாட்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினாத்தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத்தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) மற்றும் (E) என ஐந்து பதில்களை (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், அவற்றுள் மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்ப வேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையினை அளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
6. வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவிதக் குறிப்புகளையும் எழுதக்கூடாது. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள "Space for Rough Work" பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.
7. வினா வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ (ம) பகுதி-இ), ஆங்கில வடிவே இறுதியானது.
8. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது.
9. தேர்வு முடிந்தபின் உங்களுடைய விடைத்தாளை அறைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்த பின்னரே செல்ல வேண்டும். இவ்வினாத்தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையத்தின் விருப்புரிமையின் அடிப்படையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

பகுதி-அ (தமிழ் மொழி தகுதித் தேர்வு)
(பத்தாம் வகுப்புத் தரம்)

Part-A (Tamil Eligibility Test) (SSLC Standard)

வினாக்கள் : 1–100 **மொத்த மதிப்பெண்கள் : 150**

Questions : 1–100 **Total Marks: 150**

1. 'Cash Management' என்பதன் கலைச்சொல் காண்க.

(A) பண மேலாண்மை
(B) பணச் சந்தை
(C) பணவிலை வீதம்
(D) பண மேலாண்மைச் சீட்டு
(E) விடை தெரியவில்லை

2. கலைச்சொல்லை தேர்ந்தெடு.
'Enteritis'

(A) குடல் அழற்சி
(B) குடல் துளையிடல்
(C) குடற் காய்ச்சல்
(D) குடல் புண் தைத்தல்
(E) விடை தெரியவில்லை

3. 'Value Education' என்பதன் கலைச்சொல் காண்க.

(A) அடிப்படைக் கல்வி
(B) மதிப்புக் கல்வி
(C) உயர் கல்வி
(D) மேல்நிலைக் கல்வி
(E) விடை தெரியவில்லை

4. 'Radiation' என்பதன் அறிவியல் தொடர்பான கலைச்சொல் என்ன என்பதை தெரிக.

(A) கதிர்வீச்சு திறன்
(B) கதிர்வீச்சு
(C) கதிர்வீச்சு பட்டை
(D) கதிர்வீச்சு ஆற்றல்
(E) விடை தெரியவில்லை

5. பழமொழியின் பொருளைத் தேர்ந்து எழுதுக.

இளமையில் கல்வி _____

(A) சிலைமேல் எழுத்து
(B) தலைமேல் எழுத்து
(C) தண்ணீரில் எழுத்து
(D) கலைமேல் எழுத்து
(E) விடை தெரியவில்லை

6. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு கொண்டு சரியானதைக் கண்டறிக.

மலை – மாலை

(A) வேதம் – மாதம்

(B) பாறைகள் – மாலைப்பொழுது

(C) அந்திப்பொழுது – ஆற்றுப்பாலம்

(D) கடல் – கிணறு

(E) விடை தெரியவில்லை

7. சந்திப் பிழையற்ற தொடரை அறிக.

(A) பசித்தவனுக்கு சோறு வாங்கி கொடுத்தான்

(B) பசித்தவனுக்குச் சோறு வாங்கி கொடுத்தான்

(C) பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான்

(D) பசித்தவனுக்கு சோறு வாங்கிக் கொடுத்தான்

(E) விடை தெரியவில்லை

8. பிரித்து எழுதுக

கண்டெடுக்கப்பட்டுள்ளன

(A) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன

(B) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன

(C) கண்டெடுக்க + பட்டு + உள்ளன

(D) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன

(E) விடை தெரியவில்லை

9. 'நை' – ஓரெழுத்து தரும் பொருளைக் கண்டறிந்து எழுதுக

(A) பொறுமை

(B) இளமை

(C) இழிவு

(D) தூய்மை

(E) விடை தெரியவில்லை

10. 'ஓதலில் சிறந்தன்று' என்று முதுமொழிக்காஞ்சி வலியுறுத்துவது எதனை?

(A) செல்வம் உடைமை

(B) வாய்மை உடைமை

(C) கற்பு உடைமை

(D) ஒழுக்கம் உடைமை

(E) விடை தெரியவில்லை

11. மனைக்கு விளக்கமாக நான்மணிக்கடிகை யாரைக் குறிப்பிடுகிறது?

(A) மடவார்

(B) ஆட்வர்

(C) பெரியவர்

(D) பிள்ளைகள்

(E) விடை தெரியவில்லை

12. நாலடியார் எத்தனை பாடல்களைக் கொண்டது?

(A) ஐநூறு பாடல்கள்

(B) அறுநூறு பாடல்கள்

(C) நானூறு பாடல்கள்

(D) முந்நூறு பாடல்கள்

(E) விடை தெரியவில்லை

13. '_____ இல் எனினும் ஈதலே நன்று' – எது?

(A) மறுபிறவி

(B) இறைவனடி

(C) மேலுலகம்

(D) கீழுலகம்

(E) விடை தெரியவில்லை

14. சரியான உயர்திணைச் சொல்லைத் தேர்ந்தெடு

(A) காடுகள்
(B) மரங்கள்
(C) புலவர்கள்
(D) மரம்
(E) விடை தெரியவில்லை

15. ஒருமை – பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது.
(B) உலகங்கள் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது.
(C) உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனவை.
(D) உலகம் என்பது ஐம்பெரும் பூதங்கள் ஆகும்.
(E) விடை தெரியவில்லை

16. இராமனால் இராவணன் கொல்லப்பட்டான் – இது எவ்வகை வினை?

(A) செய்வினை
(B) செயல்பாட்டு வினை
(C) தன்வினை
(D) பிறவினை
(E) விடை தெரியவில்லை

17. எவ்வகைத் தொடர் எனக் கண்டறிக.
செல்வி கட்டுரை எழுதாமல் இராள்.

(A) உடன்பாட்டுத் தொடர்
(B) எதிர்மறைத் தொடர்
(C) தன்வினைத் தொடர்
(D) பொருள்மாறா எதிர்மறைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

18. 'Housing Board' என்பதன் கலைச்சொல் கண்டறிக.

(A) வீட்டு வசதி திட்டம்
(B) வீட்டு வசதி
(C) வீட்டு வசதி வாரியம்
(D) இல்லம்
(E) விடை தெரியவில்லை

19. மொழியின் இறுதியில் வரும் வினா எழுத்துகளைக் கூறுக.

(A) எ, யா (B) ஆ, ஓ

(C) ஏ (D) உ

(E) விடை தெரியவில்லை

20. பொருத்தமான சுட்டுச் சொற்களைக் கொண்டு நிரப்புக.

என் வீடு _____ உள்ளது

(A) அது (B) அங்கு

(C) அவை (D) உது

(E) விடை தெரியவில்லை

21. பொருள் வேறுபாடு அறிக.

விதி – வீதி

(A) தலை எழுத்து – சாலை

(B) சாபம் – கடை

(C) வரம் – விருப்பம்

(D) மகிழ்ச்சி – வருத்தம்

(E) விடை தெரியவில்லை

22. ரகர, றகர வேறுபாடு அறிக.

கரை – கறை

(A) ஓடை, கசப்பு (B) காற்று, மழை

(C) வேகம், இனிமை (D) கடற்கரை, அழுக்கு

(E) விடை தெரியவில்லை

23. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

Storm

(A) புயல்
(B) சூறாவளி
(C) சுழல்காற்று
(D) கடற்காற்று
(E) விடை தெரியவில்லை

24. "தமிழ்ப்பெருங்காவலர்" என்னும் சிறப்புப் பெயருக்குரியவர்

(A) ஜி.யு. போப்
(B) தமிழறிஞர் வீரமாமுனிவர்
(C) தேவநேயப் பாவாணர்
(D) பெருஞ்சித்திரனார்
(E) விடை தெரியவில்லை

25. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவியவர்?

(A) டி.கே. சிதம்பரனாதர்
(B) காயிதே மில்லத்
(C) தேவநேயப் பாவாணர்
(D) கி.வா. ஜகந்நாதர்
(E) விடை தெரியவில்லை

26. 1856இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் _____ என்பவர் திராவிட மொழிகள் ஆரிய மொழிக் குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனக் கூறினார்.

(A) ச. அகத்தியலிங்கம்
(B) அறிஞர் வில்லியம் ஜோன்ஸ்
(C) மாக்ஸ் முல்லர்
(D) கால்டுவெல்
(E) விடை தெரியவில்லை

27. அரைப்புள்ளி அமையும் இடங்களைக் கண்டறிக.

எனக்கு நிலம் இருக்கிறதும் ஒண்ணுதான் இல்லாததும் ஒண்ணுதான்

(A) எனக்கு நிலம் இருக்கிறதும் ஒண்ணுதான்; இல்லாததும் ஒண்ணுதான்.

(B) எனக்கு நிலம்; இருக்கிறதும் ஒண்ணுதான்; இல்லாததும், ஒண்ணுதான்.

(C) எனக்கு நிலம்; இருக்கிறதும் ஒண்ணுதான்; இல்லாததும்; ஒண்ணுதான்.

(D) எனக்கு நிலம் இருக்கிறதும்; ஒண்ணுதான்; இல்லாததும் ஒண்ணுதான்.

(E) விடை தெரியவில்லை

28. சரியான கால்புள்ளி இடப்பட்ட தொடரைக் கண்டறிக.

அத்தி ஆலம் கொழிஞ்சி பலா

(A) அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா,

(B) அத்தி ஆலம், கொழிஞ்சி பலா.

(C) அத்தி ஆலம் கொழிஞ்சி, பலா.

(D) அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

(E) விடை தெரியவில்லை

29. பொருளுக்கேற்ற வினைமரபைத் தேர்ந்தெடு

பழத்தை _____

(A) தின்

(B) உண்

(C) குடி

(D) பருகு

(E) விடை தெரியவில்லை

30. மரபுப் பிழையற்ற சொல்லுடன் இணை

கோழி

(A) கூவும்

(B) கத்தும்

(C) குழறும்

(D) கொக்கரிக்கும்

(E) விடை தெரியவில்லை

31. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல்.

(a)	கரன்சி நோட்	1.	வங்கி
(b)	பேங்க்	2.	வரைவோலை
(c)	செக்	3.	காசோலை
(d)	டிமாண்ட் டிராஃப்ட்	4.	இணையத்தள வணிகம்

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	4	3
(B)	4	1	3	2
(C)	1	2	3	4
(D)	3	1	4	2

(E) விடை தெரியவில்லை

32. 'வாடகை' – என்பதன் தமிழ்ச்சொல்.

(A) வருமானம் (B) குடிக்கூலி

(C) பணம்கொடுப்பது (D) சொந்தம்

(E) விடை தெரியவில்லை

33. "சிறிய கடிதம்" இத்தொடர் உணர்த்தும் எச்சத்தின் பெயரைக் கண்டறிக.

(A) தெரிநிலை வினையெச்சம் (B) குறிப்பு வினையெச்சம்

(C) தெரிநிலை பெயரெச்சம் (D) குறிப்புப் பெயரெச்சம்

(E) விடை தெரியவில்லை

அக்ஸியம் ஸ்பேஸ் நிறுவனத்தின் மூலம் சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்றிருக்கும், நால்வரில் ஒருவரான பெகிவிட்சன், அமெரிக்காவின் மிகச் சிறந்த விண்வெளி வீராங்கனை. நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் 38 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த இவர், மனிதர்களை விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு அனுப்பும் தனியார் நிறுவனத்தின் இரண்டாவது திட்டத்துக்குத் தலைவராகச் செயல்பட்டவர். நாசாவில் பணியாற்றியபோது மூன்று நெடும் பயணங்களை விண்வெளிக்கு மேற்கொண்டதுடன் மிக அதிக நாட்கள் (665) விண்வெளியில் இருந்தவர் என்கிற சாதனையைப் படைத்தார். அக்ஸியம் 2 திட்டப் பயணத்திற்குப் பிறகு 675 நாட்கள் விண்வெளியில் இருந்த முதல் அமெரிக்க விண்வெளி வீரர். உலகின் முதல் விண்வெளி வீராங்கனை என்கிற சாதனைகளை பெகிவிட்சன் படைத்தார். **(34 – 38)**

வினாக்கள் :

34. அக்ஸியம் ஸ்பேஸ் நிறுவனத்தின் மூலம் சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்ற அமெரிக்க வீராங்கனை

(A) ரோசலிண்ட் பிராங்க்ளின்
(B) மேரி கியூரி
(C) பார்பாரா மேக்லிண்ட்
(D) பெகிவிட்சன்
(E) விடை தெரியவில்லை

35. பெகிவிட்சன் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றிய ஆண்டுகளின் எண்ணிக்கை

(A) 28
(B) 38
(C) 18
(D) 25
(E) விடை தெரியவில்லை

36. பெகிவிட்சன் விண்வெளியில் தங்கிய நாட்களின் எண்ணிக்கையைக் கண்டறிக.

(A) 663
(B) 664
(C) 665
(D) 666
(E) விடை தெரியவில்லை

37. அக்ஸியம்-2 திட்டத்திற்கு 675 நாட்கள் விண்வெளியில் இருந்த முதல் அமெரிக்க விண்வெளி வீரரைக் கண்டறிக.

(A) மேரி கியூரி
(B) ரேச்சல் கார்சன்
(C) கேத்ரின் ஜான்சன்
(D) பெகிவிட்சன்
(E) விடை தெரியவில்லை

38. பெகிவிட்சன் மேற்கொண்ட விண்வெளிப் பயணங்களின் எண்ணிக்கை

(A) 1
(B) 2
(C) 4
(D) 3
(E) விடை தெரியவில்லை

39. பேச்சு வழக்கு அல்லாத சொல்லைத் தேர்ந்தெடு.

(A) மனைவி
(B) பதட்டம்
(C) நாட்கள்
(D) சுவரில்
(E) விடை தெரியவில்லை

40. இருபொருள் தருக.

ஆறு

(A) எண் – நதி
(B) குணம் – தகுதி
(C) உடல் – வலிமை
(D) உண்மை – உடல்
(E) விடை தெரியவில்லை

41. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

(A) சங்கு, கண், நூல், கோல், நீதி, தமிழ்
(B) தமிழ், நூல், சங்கு, கோல், நீதி, கண்
(C) நூல், கோல், கண், நீதி, சங்கு, தமிழ்
(D) கண், கோல், சங்கு, தமிழ், நீதி, நூல்
(E) விடை தெரியவில்லை

42. 'தொன்மை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் _____ .

(A) புதுமை
(B) பழமை
(C) பெருமை
(D) சீர்மை
(E) விடை தெரியவில்லை

43. உரிய பொருளைக் கண்டறிக.

பேதையார்

(A) உறவினர்
(B) பகைவர்
(C) அறிவற்றவர்
(D) வறியவர்
(E) விடை தெரியவில்லை

44. கம்பெனி - என்பதன் தமிழ்ச்சொல் எது?

(A) நிருவாகம்
(B) நிர்ணயம்
(C) அலுவலகம்
(D) நிறுவனம்
(E) விடை தெரியவில்லை

45. சைக்கிள் எனும் ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(A) தள்ளு வண்டி
(B) உந்து வண்டி
(C) மிதி வண்டி
(D) மகிழுந்து
(E) விடை தெரியவில்லை

46. 'உரை' என்ற வேர்ச்சொல் வினைமுற்றைக் கண்டறிக.

(A) உரையார்
(B) உரைத்து
(C) உரைத்த
(D) உரையா
(E) விடை தெரியவில்லை

47. இரண்டு வினைச்சொற்களின் வேறுபாடு உள்ள தொடரைத் தெரிவு செய்க.

மாறு – மாற்று

(A) முதலில் நீ நல்லவனாக மாறு; பிறகு நண்பனை நல்லவனாக மாற்று.
(B) முதலில் நீ நல்லவனாக இரு; பிறகு நண்பனை நல்லவனாக மாற்று.
(C) முதலில் நீ நல்லவனாக மாறு; பிறகு நண்பனை நல்லவனாக நடத்து.
(D) முதலில் நீ நல்லவனாக நட; பிறகு நண்பனை நல்லவனாக மாற்று.
(E) விடை தெரியவில்லை

48. பிழையற்ற பழமொழியை தேர்ந்து தெரிக.

(A) உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
(B) உப்பிள்ள்ளாப் பன்டம் குப்பையிலே
(C) பண்டம் குப்பையிலே உப்பில்லாப்
(D) குப்பையிலே உப்பிள்ளாப் பண்டம்
(E) விடை தெரியவில்லை

49. பழமொழியின் பொருளை அறிக.

'விருந்தும்' _____

(A) மருந்தும் மூன்று நாள்
(B) மருந்தும் இரண்டு நாள்
(C) மருந்தும் ஐந்து நாள்
(D) மருந்தும் பத்து நாள்
(E) விடை தெரியவில்லை

50. மரபுத்தொடரின் பொருளைக் கண்டறிக.

'அவசரக்குடுக்கை'

(A) உடனே செயல்படுதல்
(B) தானே செயல்படுதல்
(C) எண்ணிச் செயல்படாமை
(D) சேர்ந்து செயல்படுதல்
(E) விடை தெரியவில்லை

51. பின்வரும் மரபுத்தொடரின் பொருளறிக :

வழி வழியாக

(A) வேகமாக
(B) பரம்பரை பரம்பரையாக
(C) துணிச்சலாக
(D) செயல்வடிவமாக
(E) விடை தெரியவில்லை

52. மரபுத்தொடரின் பொருளையறிந்து பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(A) வாழையடி வாழையாக – பரம்பரை பரம்பரையாக
(B) கொடி கட்டிப் பறத்தல் – புகழ் பெற்று விளங்குதல்
(C) கம்பி நீட்டுதல் – ஏமாற்றிச் செல்லுதல்
(D) கண்ணை மூடிக்கொண்டு – ஆராய்ந்து பார்த்தல்
(E) விடை தெரியவில்லை

53. மயில் கூவும், ஆந்தை அகவும் – ஒலி மரபுப் பிழைகளைத் திருத்துக.

(A) அலறும், அகவும்
(B) கூவும், அலறும்
(C) அகவும், அலறும்
(D) கூவும், அகவும்
(E) விடை தெரியவில்லை

54. பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

'தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்'.

(A) தேர்வெழுத விரைவாகச் செல்லுங்கள், நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.
(B) தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள், நேரங் கழிச்சி சென்றால் பதட்டமாயிருக்கும்.
(C) தேர்வெழுத விரைவாக போங்க, நேரம் கழிச்சி போனாப் பதற்றமாகிவிடும்.
(D) தேர்வெழுத விரைவாகச் செல்லுங்கள், நேரம் கழித்து போனாப் பதட்டமாயிருக்கும்.
(E) விடை தெரியவில்லை

55. ஒரு – ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க :

(A) வீட்டின் பக்கத்தில் நிற்கின்றன ஓர் மரம்
(B) வீட்டின் பக்கத்தில் நிற்கின்றது ஒன்று மரம்
(C) வீட்டின் பக்கத்தில் நிற்கின்ற ஓர் மரம்
(D) வீட்டின் பக்கத்தில் நிற்கிறது ஒரு மரம்
(E) விடை தெரியவில்லை

56. நாகை, _____ என்ற ஊரின் மரூஉ.

(A) நாகர்கோவில்
(B) நாகப்பட்டினம்
(C) நாங்குநேரி
(D) நாஞ்சில் நாடு
(E) விடை தெரியவில்லை

57. "யானையால் யானையாத் தற்று" – இதில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டுக.

(A) உவமையணி

(B) எடுத்துக்காட்டு உவமையணி

(C) இல்பொருள் உவமையணி

(D) உருவக அணி

(E) விடை தெரியவில்லை

58. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

(A) ஈத்துவக்கும் அறியார் கொல் இன்பம்

(B) இன்பம் அறியார் ஈத்துவக்கும் கொல்

(C) ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்

(D) இன்பம் ஈத்துவக்கும் கொல் அறியார்

(E) விடை தெரியவில்லை

59. நிரப்புக

மோந்து பார்த்தால் _____ வாடிவிடும்.

(A) காந்தள் மலர்

(B) நோன்றி மலர்

(C) அணிச்ச மலர்

(D) பாதிரி மலர்

(E) விடை தெரியவில்லை

60. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

மனிதர்களின் உயர்வு எதன் அடிப்படையில் அமைந்துள்ளது?

(A) ஆக்கம்

(B) செல்வம்

(C) ஊக்கம்

(D) திறமை

(E) விடை தெரியவில்லை

61. கலைச்சொல்லின் பொருளை அறிக.

'Audio Cassette'

(A) கேட்பொலி பேழை
(B) கேட்பொலி சாதனம்
(C) கேட்பொலி கோப்பு
(D) கேட்பொலி வெளியீடு
(E) விடை தெரியவில்லை

62. 'Fake News' என்பதன் ஊடகம் சார்ந்த கலைச்சொல் காண்க.

(A) சிறப்புச் செய்தி
(B) தலையங்கம்
(C) செய்தித்தாள்
(D) பொய்ச்செய்தி
(E) விடை தெரியவில்லை

63. கலைச்சொல் காண்க.

'Melting furnace'

(A) உருகு நிலை
(B) உருக்கு உலை
(C) உருகு வீதம்
(D) உருகு விகிதம்
(E) விடை தெரியவில்லை

64. கலைச் சொல்லைக் காண்க.

'Fog'

(A) மூடுபனி
(B) மூடுபனி படிவு
(C) மூடுபனி விரவல்
(D) மூடுபனி கொட்டுதல்
(E) விடை தெரியவில்லை

65. 'Warrant' என்பதன் சட்டம் தொடர்பான கலைச்சொல் அறிக.

(A) எச்சரிக்கை
(B) உத்திரவாதம்
(C) வழக்கு
(D) பிடி ஆணை
(E) விடை தெரியவில்லை

66. னகர, ணகர வேறுபாடு அறிக.

கான் – காண்

(A) தண்ணீர் – ஓடல்

(B) மழை – வேகம்

(C) காடு – பார்த்தல்

(D) இனிப்பு – கேட்டல்

(E) விடை தெரியவில்லை

67. லகர, ளகர, ழகர வேறுபாடு அறிக.

வலி, வளி, வழி

(A) வேண்டல், மரம், ஓடு

(B) துன்பம், காற்று, பாதை

(C) இன்பம், கடல், மாலை

(D) பொறுமை, தேனி, வாசல்

(E) விடை தெரியவில்லை

68. பொருத்துக :

(a)	விலை	1.	விரும்பு
(b)	விளை	2.	நூல்
(c)	விழை	3.	மதிப்பு
(d)	இழை	4.	உண்டாக்குதல்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	3	4	2	1
(C)	3	4	1	2
(D)	4	1	2	3

(E) விடை தெரியவில்லை

69. எவ்வெந்த மொழிச் சொற்களைக் கலந்து எழுதுதல், மணியும் பவளமும் கலந்து கோர்த்த மாலைபோலாகும் எனப்படுகிறது?

(A) கன்னட மொழி, தமிழ்மொழி

(B) தமிழ்மொழி, வடமொழி

(C) வடமொழி, கன்னடமொழி

(D) தமிழ்மொழி, தெலுங்குமொழி

(E) விடை தெரியவில்லை

70. 'வேணுவனம்' என்னும் பெயரையுடைய நகரம்.

(A) திருச்சி

(B) திருநெல்வேலி

(C) திருவொற்றியூர்

(D) திருத்தணி

(E) விடை தெரியவில்லை

71. கணிமேதாவியார் இயற்றிய வேறு நூல் எது?

(A) ஐந்திணை ஐம்பது

(B) திணைமொழி ஐம்பது

(C) திணைமாலை நூற்றைம்பது

(D) ஐந்திணை எழுபது

(E) விடை தெரியவில்லை

72. சிறுபஞ்சமூலம் என்பதன் பொருள்

(A) ஐந்து சிறிய மருந்துகள்

(B) ஐந்து சிறிய கருத்துகள்

(C) ஐந்து சிறிய வேர்கள்

(D) ஐந்து சிறிய மூலிகைகள்

(E) விடை தெரியவில்லை

73. கீழ்க்கண்ட விலங்கின் இளமைப் பெயரைத் தேர்ந்தெடு.

குதிரைக் _____

(A) குட்டி
(B) கன்று
(C) குருளை
(D) பறழ்
(E) விடை தெரியவில்லை

74. பலவின்பாலை உணர்த்தும் தொடரைக் கண்டறிக.

(A) மயில் அழகான சிறகினை விரித்து ஆடும்.
(B) சிறுவர்கள் மனம் வீசும் மாலையை அணிந்தனர்.
(C) பறவைகள் பறப்பதை மறந்து கீழே விழுந்தன.
(D) அணில் பழம் சாப்பிட்டது.
(E) விடை தெரியவில்லை

75. ஒன்றன்பாலை உணர்த்தும் தொடரைக் கண்டறிக.

(A) பசு பால் தந்தது
(B) நாய்கள் வேகமாக குரைத்தன
(C) ராமன் காட்டிற்கு சென்றான்
(D) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது
(E) விடை தெரியவில்லை

76. உயர்திணையில் பலரைக் குறிப்பது _____.

(A) பலர்பால்
(B) பலவின்பால்
(C) ஆண்பால்
(D) பெண்பால்
(E) விடை தெரியவில்லை

77. ஆண்பாலை உண்ர்த்தும் தொடரைக் கண்டறிக.

(A) யானைகள் கூட்டமாக மேய்ந்தன
(B) கண்ணகி சிலம்பைக் கொடுத்தாள்
(C) பசுக்கள் புல்லை மேய்ந்தன
(D) சீவகன் போர்களத்திற்குச் சென்றான்
(E) விடை தெரியவில்லை

78. கீழ்க்காணும் தொடர்களில் வினையெச்சத் தொடரினைக் கண்டறிக.

(A) இனியாள் கவிஞர்

(B) பாடினாள் புகழினியாள்

(C) கேட்ட பாடல்

(D) பாடி மகிழ்ந்தனர்

(E) விடை தெரியவில்லை

79. 'எழுது' என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் கண்டறிக.

(A) எழுதினாள்

(B) எழுதா

(C) எழுதி

(D) எழுதிய

(E) விடை தெரியவில்லை

80. வாழிய – வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

(A) வாழ்

(B) வாழி

(C) வாழ்க

(D) வா

(E) விடை தெரியவில்லை

81. "மாடுகள் தமது தலையை ஆட்டின" இத்தொடரில் "தமது" என்னும் சொல் உணர்த்தும் பொருள் என்ன?

(A) ஒருமை

(B) பன்மை

(C) முன்னிலை

(D) படர்க்கை

(E) விடை தெரியவில்லை

82. சரியான இணையைத் தெரிவு செய்க.

(A) Responsibility – ஒப்புரவு நெறி

(B) Courtesy – நற்பண்பு

(C) Objective – வறுமை

(D) Charity – வாய்மை

(E) விடை தெரியவில்லை

83. "காஜி" என்னும் அரபுச் சொல்லிற்குச் தமிழ்ச்சொல்லைக் கண்டறிக.

(A) இறை ஊழியர்

(B) வழிபாட்டாளர்

(C) தலைவர்

(D) நடுவர்

(E) விடை தெரியவில்லை

84. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

Scout

(A) அறக்கட்டளை

(B) தன்னார்வலர்

(C) சமூகப் பணியாளர்

(D) சாரணர்

(E) விடை தெரியவில்லை

85. சரியான இணையைத் தேர்க.

(A) Lute Music – யாழிசை

(B) Rote – நீதி நூல் திரட்டு

(C) Grand-Daughter – மகள்

(D) Chamber – நெட்டுரு

(E) விடை தெரியவில்லை

86. ஓரெழுத்து ஒருமொழியைத் தேர்ந்து எழுதுக.

(A) ம (B) மி

(C) மே (D) மெ

(E) விடை தெரியவில்லை

87. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.

நாற்றம்

(A) மணம் (B) வாசனை

(C) துர்நாற்றம் (D) அதி நாற்றம்

(E) விடை தெரியவில்லை

88. வினாக்குறி அமையும் இடங்களைக் கண்டறிக.

பெண்ணே நீ யார் இப்பாத்திரத்தின் பெயர் என்ன

(A) பெண்ணே நீ யார்? இப்பாத்திரத்தின் பெயர் என்ன?

(B) பெண்ணே நீ யார் இப்பாத்திரத்தின் பெயர் என்ன?

(C) பெண்ணே நீ யார்? இப்பாத்திரத்தின் பெயர் என்ன

(D) பெண்ணே? நீ யார்? இப்பாத்திரத்தின் பெயர் என்ன?

(E) விடை தெரியவில்லை

89. சரியான வியப்புக்குறிகள் இடப்பட்ட தொடரைக் கண்டறிக.

எழுந்தருளிய முருகனே செங்கீரை ஆடி அருள்க.

(A) எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க!

(B) எழுந்தருளிய முருகனே செங்கீரை ஆடி! அருள்க!

(C) எழுந்தருளிய! முருகனே செங்கீரை ஆடி! அருள்க.

(D) எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க

(E) விடை தெரியவில்லை

90. இரு வினைகளின் வேறுபாடறிந்து தொடரைத் தெரிவு செய்க.

நிறைந்த – நிறைத்த

(A) கற்கள் நிறைத்த குளத்தை தண்ணீரால் நிறைத்தனர்

(B) கற்கள் நிறைந்த குளத்தை தண்ணீரால் நிறைத்தனர்

(C) கற்கள் நிறைத்த குளத்தை தண்ணீரால் நிறைந்தனர்

(D) கற்கள் நிறைந்த குளத்தை தண்ணீரால் நிறைந்தனர்

(E) விடை தெரியவில்லை

91. கீழ்க்காணும் தொடர்களில் ஒற்றுப்பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) மரசட்டம்

(B) மலர்பாதம்

(C) தாய்தமிழ்

(D) எனக்குத் தெரியும்

(E) விடை தெரியவில்லை

92. கீழ்க்காணும் தொடர்களில் எழுத்துப்பிழையற்ற தொடரினைக் கண்டறிக.

(A) நிலாச்சோறு

(B) கனா கண்டேன்

(C) உலகபந்து

(D) புலிதோல்

(E) விடை தெரியவில்லை

93. கீழ்க்காணும் சொற்களில் வினைச்சொல்லினைக் கண்டறிக.

(A) மற்று

(B) நன்மை

(C) போ

(D) சால

(E) விடை தெரியவில்லை

94. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

வேலியே பயிரை மேய்ந்தது போல

(A) பயனற்ற செயல்
(B) தற்செயல் நிகழ்வு
(C) எதிர்பாரா நிகழ்வு
(D) கடமை தவறுதல்
(E) விடை தெரியவில்லை

95. உவமைத்தொடரின் பொருளை எழுதுக.

'விழலுக்கு இறைத்தநீர் போல'

(A) நல்ல செயல்
(B) பயனற்ற செயல்
(C) தேவையான செயல்
(D) வேண்டிய செயல்
(E) விடை தெரியவில்லை

96. உவமையின் பொருத்தமான பொருளை தேர்வு செய்க.

'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல'

(A) தற்செயல் நிகழ்வு
(B) நற்செயல் நிகழ்வு
(C) எதிர்பாரா நிகழ்வு
(D) எதிர்பார்த்த நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

97. உவமைகளால் விளக்கப் பெறும் பொருள்களுள் – பொருந்தாதது தேர்க.

(A) கிணற்றுத் தவளை போல – உலகம் அறியாமை
(B) பசுமரத்து ஆணிபோல – எளிதில் மனதில் பதிதல்
(C) குன்றின் மேலிட்ட விளக்குபோல – பரவிய புகழ்
(D) எலியும் பூனையும் போல – மனமொத்த நட்பு
(E) விடை தெரியவில்லை

98. சொல்லுக்கு இணையான பொருள் தருக.

கந்தம், மிசை, விசனம்

(A) கவலை, உட்கார, உயர

(B) உலகம், நறுமணம், மகிழ்ச்சி

(C) மணம், மேல், கவலை

(D) மேல், கவலை, மணம்

(E) விடை தெரியவில்லை.

99. சொல் – பொருள் – பொருத்துக :

(a) நித்தம் நித்தம்

(b) மட்டு

(c) வையம்

(d) திட்டுமுட்டு

1. அளவு
2. தடுமாற்றம்
3. நாள்தோறும்
4. உலகம்

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	4	3
(B)	3	1	4	2
(C)	1	2	3	4
(D)	4	3	2	1

(E) விடை தெரியவில்லை

100. இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு – சரியான தொடரைத் தேர்க.

(A) இப்ப நேனக்கு புரிஞ்சி போச்சு

(B) இப்ப எனக்குப் புரிஞ்சி போச்சுது

(C) இப்பொழுது எனக்குப் புரிந்து விட்டது

(D) இப்பொழுது எனக்குப் புரிஞ்சி விட்டது

(E) விடை தெரியவில்லை